

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2023) சென்னை மாவட்டம், நங்கநல்லூர், நேரு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளான கல்வி வளர்ச்சி நாளையொட்டி நடைபெற்ற விழாவில், தன்னைச் சந்திக்க வருபவர்கள் அன்புப் பரிசாக வழங்கிய 7,740 புத்தகங்களை பள்ளிக்கல்வித் துறையின் பொது நூலகப் பயன்பாட்டிற்காக வழங்கிடும் விதமாக அப்புத்தகங்களை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழியிடம் வழங்கினார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மு.அருணா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2023) சென்னை மாவட்டம், நங்கநல்லூர், நேரு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளான கல்வி வளர்ச்சி நாளையொட்டி நடைபெற்ற விழாவில், சென்ற கல்வியாண்டில் சிறப்பாக செயல்பட்ட நங்கநல்லூர், நேரு அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளின் 12 மற்றும் 10–ஆம் வகுப்பைச் சேர்ந்த மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகை வழங்கி வாழ்த்தினார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மு.அருணா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாள்: மாணவ – மாணவியர்களுக்கு

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பரிசுகள் வழங்கி சிறப்பித்தார்!

## 7,740 நூல்களை பொது நூலகத்திற்கு வழங்கினார் !

**சென்னை, ஜூலை 16 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (15.7.2023) சென்னை மாவட்டம், நங்கநல்லூர், நேரு அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் பெருந் தலைவர் காமராசர் பிறந்த நாளான கல்வி வளர்ச்சி நாளையொட்டி நடைபெற்ற விழா வில், பெருந்தலைவர் காமராசர் திருவுரு வப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, மாணவ, மாணவியர்களுக்கு ஆங்கிலம், தமிழ் அகராதிகளையும், ஆசி ரியர்களுக்கு பரிசுப் பொருட்களையும், அப்பள்ளிகளில் சிறப்பாகச் செயல்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகையும் வழங்கி, வாழ்த்தினார்.**

“பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளான ஜூலை 15, ஒவ்வொரு ஆண்டும் கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப் படும்” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2006ஆம் ஆண்டு அறிவிக் கப்பட்டு, அதன்படி தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் “கல்வி வளர்ச்சி நாள்” கொண்டாடப்பட்டு வருகிறது.

அந்த வகையில், இக்கல்வியாண்டில் கல்வி வளர்ச்சி நாளையொட்டி சென்னை மாவட்டம், நங்கநல்லூர், நேரு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு முதல்வர் அவர்கள் நேற்று, மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, சென்ற கல்வி யாண்டில் (2022-23) சிறப்பாகச் செயல் பட்ட நங்கநல்லூர், நேரு அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக ளின் 12ஆம் வகுப்பைச் சேர்ந்த 6 மாணவ, மாணவியர்களுக்கு 60 ஆயி ரம் ரூபாய்க்கான பரிசுத் தொகையும், 10 ஆம் வகுப்பைச் சேர்ந்த 6 மாணவ, மாணவியர் களுக்கு 44 ஆயிரம் ரூபாய்க்கான பரிசுத் தொகையும் முதல் வர் அவர்கள் வழங்கி வாழ்த்தினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.7.2023) சென்னை மாவட்டம், நங்கநல்லூர், நேரு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாளான கல்வி வளர்ச்சி நாளையொட்டி நடைபெற்ற விழாவில், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதாஜீவன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மேலும், நேரு அரசு ஆண்கள் மற்றும் பெண்கள் மேல்நிலைப் பள்ளிகளில் 10, 11 மற்றும் 12ஆம் வகுப்புகளில் பயிலும் 777 மாணவ, மாணவியர்களுக்கு ஆங் கிலம், தமிழ் அகராதிகளை வழங்கிடும் அடையாளமாக 4 மாணவ, மாணவியர் களுக்கு அகராதிகளையும், பள்ளி ஆசிரி யர்களுக்கு பரிசுப் பொருட்களையும் முதல்வர் அவர்கள் வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

தொடர்ந்து, முதல்வர் அவர்கள், தன்னைச் சந்திக்க வந்தவர்கள் அன்புப் பரிசாக வழங்கிய 7,740 புத்தகங்களை பள்ளிக்கல்வித் துறையின் பொது நூலகப் பயன்பாட்டிற்காக வழங்கிடும் விதமாக அப்புத்தகங்களை பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழியிடம் வழங்கினார்.

இவ்விழாவில், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங் கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, ஏ.எம்.வி.பிரபாகரராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியத் தலைவர் எர்ணாவூர் ஏ.நாராய ணன், முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் ஆர்.எஸ்.பாரதி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர் புத்துறை இயக்குநர் த.மோகன், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மதி மு.அருணா, உள்ளாட்சி அமைப்பு களின் பிரதிநிதி கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**ட்விட்டர் பதிவு!**

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளான கல்வி வளர்ச்சி நாளை யொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வரு மாறு:-

**கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 121ஆவது பிறந்த நாளான இன்று, நங்கநல்லூர் நேரு அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடை பெற்ற கல்வி வளர்ச்சி நாள் விழாவில் பங் கேற்று, அவரது புகழைப் போற்றினேன்.**

**அறிவியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல் தலைவராக 2017இல் பொறுப்பேற்றது முதல், என்னைச் சந்திக்க வருபவர்கள் பூங்கொத்துகளையும் பொன் னாடைகளையும் தவிர்த்து, புத்தகங்களை அளித்திடச் சொல்லியிருந்தேன். அதன்படி என்னை வந்தடைந்த புத்தகங்களில் ஒன் றரை இலட்சம் புத்தகங்களை தமிழ்நாட் டின் பல்வேறு நூலகங்களுக்கும், என்னி டம் புத்தகங்கள் வேண்டி கடிதம் எழுதியவர்களுக்கும் அளித்துள்ளேன்.**

**அதன் தொடர்ச்சியாக, பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாளில், முத்தமிழறிஞர் கலைஞர் அறிவித்த கல்வி வளர்ச்சி நாளில் 7740 புத்தகங்களைப் பொது நூலகத்துறைக்கு வழங்கினேன்.**

**பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் கலைஞர் நூற்றாண்டு நூலகத் திறப்பு நாள் என இந்நாளில், ‘வீட்டிற்கோர் புத்த கச்சாலை’ என்று பேரறிஞர் அண்ணா சொன்னது மெய்ப்பட உழைப்போம்!**

இவ்வாறு – சமூக வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப் பிட்டுள்ளார்.

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாள் - கல்வி வளர்ச்சி நாளான நேற்று, மதுரையம்பதியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ‘கலைஞர் நூற் றாண்டு நூலகத் தினை’த் திறந்து வைத்து - அதனை நாட்டு மக்களுக்கு அர்ப்ப ணித்து விழாப் பேருரையாற்றி, கர்மவீரர் காமராசரின் பிறந்த நாளுக்குப் பெரு மைச் சேர்ந்தார்கள் எனின் அது மிகை யல்ல!

---

### மு.இராசா எம்.சி. தலைமை! கே.கண்ணன் எம்.சி. முன்னிலை!

# கலைஞர்நகர் வடக்கில் கல்விக்கண் திறந்த கலைஞரைப் புகழும் துணைவேந்தர்கள் அரங்கம்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்! தமிழச்சி தங்கபாண்டியன் - ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா பங்கேற்பு!

*சென்னை, ஜூலை. 16*

சென்னை தெற்கு மாவட் டம், கலைஞர் நகர் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்த மிழ் அறிஞர் கலைஞர் நூற் றாண்டு விழா முன்னிட்டு கல்வி கண் திறந்த கலைஞ ரைப் புகழும் துணைவேந்தர் கள் அரங்கம் இன்று (16.7.2023 ஞாயிற்றுக்கி ழமை மாலை 5 மணி அள வில் எம்.எல்.ஏ.பொன்னழகு திருமண மண்டபத்தில் நடை பெறுகிறது.

எஸ்.எம்துரையரசன், பி. விஜயலட்சுமி, துரை.ரஞ்சித் குமார், சுப.முத்துவேல், எஸ். அபுபக்கர், டி.சார்லஸ், ஏ. எல்.ஏ.மகேஷ் ஆகியோர் வர வேற்புரை ஆற்றுகின்றனர்.

கே கண்ணன் எம்.சி, மு. கோவிந்தராசன், வீ.ஏ.ராஜா, எஸ்.மைக்கேல், பழக்கடை எஸ்.பாஸ்கரன், தஞ்சை ஆர். பாபு ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கலைஞர்நகர் வடக்கு பகுதி கழகச் செயலாளர் மு.இராசா எம்.சி. தலைமை வகிக்கிறார்.

மாவட்டக் கழகச் செய லாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் நிகழ்ச்சி யினை துவக்கி வைக்கிறார்.

கல்விக்கண் திறந்த கலை ஞரை புகழும் துணைவேந்தர் கள் அரங்கத்திற்கு தமிழ்ப் பல்கலைக்கழகம் மேனாள் துணை வேந்தர் முனைவர் ம.ராஜேந்திரன் தலைமை வைக்கிறார்.

‘தொழில்நுட்ப முன்னோடி’ எனும் தலைப்பில் முனைவர் மன்னர்ஜவஹரும், ‘சிறுபான் மையினரின் சிகரம்’ எனும் தலைப்பில் முனைவர் சாதிக் கும், ‘கிராம மாணவர்களின் கிழக்கு’ எனும் தலைப்பில் முனைவர் இரா.தி.சபாபதி மோகனும், ‘மகளிர் போற் றும் மாமனிதர்’ எனும் தலைப்பில் முனைவர் கல் யாணி அன்புச்செல்வன் ஆகி யோர் சிறப்புரை ஆற்றுகின் றனர். முனைவர் சொற்கோ கருணாநிதி நெறியாளராக உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, ஏ. எம்.வி.பிரபாகர் ராஜா எம். எல்.ஏ., க.தனசேகரன் எம்.சி, துணை மேயர் மு.மகேஷ்கு மார், எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ, காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, கவிஞர் காசி முத்துமாணிக்கம், எம். கிருஷ்ணமூர்த்தி எம்.சி, எஸ். டி.தங்கராசன், உ.துரைராஜ், பி.எஸ்.முருகேசன், வாசுகி பாண்டியன், பொன் வர. லோகு, ஆர்.ஸ்டெல்லா ஜாஸ் மின் ரத்னா, நிலவரசி துரை ராஜ், சென்னை த.அரங்கநா தன், மலர்மன்னன், க.இளங் கோவன், ஆர்.சசிகுமார், எஸ். குணசேகரன், த.விஸ்வநாதன், மு.மனோக ரன், எஸ்.பாஸ்க ரன், க.சோமு, பி.மணிமாறன், கு.சண்முகம், இரா.துரைராஜ், வே.ராஜன், எஸ்.வி.ரவிச்சந்தி ரன், வி.இ.மதியழகன், சு. சேகர், துரை.கபிலன், துரை வீரமணி, ஜி.வெங்கடேசன் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

சா.நாகராஜன், வாட்டர் எஸ்.விஜயகுமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் சேலத்தில் உள்ள தமிழ்நாடு ஹோட்டலை (13.07.2023) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற் கொண்டார். உடன் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்கு நர் சந்தீப் நந்தூரி, துணை மேயர் திருமதி மா.சாரதாதேவி, முன்னாள் அமைச்சர் டி.எம்.செல்வகணபதி, சேலம் வருவாய் கோட்டாட்சியர் அம்பாயி ரநாதன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.